பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 26 வியாழக்கிழமை 08.04.2021 கதிர் 22


## பனையால் வீழ்ந்து குடும்பஸ்தர் சாவு!

யாழ்., வடமராட்சியில் பனையால் வீழ்ந்து சீவல் தொழிலாளி ஒருவர் பரிதாபகரமாக சாவடைந்துள்ளார்.

கரவெட்டி மேற்கு, கௌடானைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான மகாலிங்கம் விவிராசா (வயது 53) என்பவரே

2

## பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் திறப்பு; மீளவும் பழைய இடத்திலிருந்து பஸ் சேவைகள்

### யாழ். மாநகரில் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற அறிவுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் சுமார் 70 வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த ஏனையவை இன்று மீளத் திறக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று உள்ளதாக அடையாளம் காணப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்

2

## மாநகர சபை அமர்வை புறக்கணித்த ஈ.பி.டி.பி.

யாழ். மாநகர சபையின் இன்றைய அமர்வுகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி புறக்கணித்துள்ளது என்று மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் முதல்வருமான திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபை முதல்வரினால் புதிதாக

2



## கண்காணிப்புக் காவலர்களுக்கு புலிகளின் பொலிஸ் சீருடையா?

### யாழ். மேயர் மணி விளக்கம்



(எஸ்.நிதர்ஷன்)

கொழும்பு மாநகர சபையைப் பின்பற்றியே, யாழ்ப்பாணம் மாநகர கண்காணிப்புக் காவலர்களுக்கும் சீருடை வழங்கப்பட்டுள்ளது என யாழ். மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

சீருடை வழங்கிய விடயத்தில் வேறு எந்த உள்நோக்கமோ, திட்டமோ தங்களுக்கு இருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர ஆணையாளர்

2

## யாழ்ப்பாணம் மாநகர விடயம்; பாதுகாப்புச் சபையில் ஆராய்வு

### முடிவுகள் இன்னமும் வெளியாகவில்லை

**கொழும்பு, ஏப்ரல் 08**

**தேசியப் பாதுகாப்புச் சபை நாடாளுமன்ற கட்டடத்தில் இன்று அவசரமாகக் கூடியது. பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாநகரைத் தூய்மைப்படுத்தும் வகையில் மாநகர சபையால் நியமிக்கப்பட்டுள்ள காவல் படை தொடர்பிலும், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சீருடை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்தும் விசேடமாக ஆராயப்பட்டது.**

2



## அரசியல் கைதியின் தாயாருக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல்

### கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் அரசியல் கைதி ஒருவரின் தாயாருக்குத் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து இன்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பு இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் அரசியல் கைதி ஒருவரின் தாயாரான கோண்டாவில் கிழக்கில் வசிக்கும்

2

## யாழ்ப்பாணத்தில் மேலும் 129 பேருக்குக் கொரோனா

### 88 பேர் பாற்பண்ணையைச் சேர்ந்தவர்கள்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 129 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றிரவு கிடைத்த பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் 88 பேர் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில்

2

## கடல் வழியாக வெளிநாடு செல்ல முயன்ற 20 பேர் வசமாக சிக்கினர்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக வெளிநாட்டுக்குச் செல்ல முற்பட்ட 20 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் சிலாவத்துறை - கொண்டச்சிக்குடா பகுதியில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கொண்டச்சிக்குடா பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட வீதிச் சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைதாகியுள்ளனர்.

2


25 வருட காலக் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியரால் தரம் 06 முதல் 11 வரையான மாணவர்களுக் குத் தமிழ் வகுப்புகள் ZOOM செயலி ஊடாக ... இணைந்து கொள்ள,

**(076) 454 5709 ஐ அழையுங்கள்!**

**மாதாந்தக்கட்டணம் 400/= மட்டுமே!**


## வவுனியா வாள்வெட்டு: இருவர் மாட்டினர்!

(வவுனியா நிருபர்)

வவுனியா - திருநாவற்குளத்தில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரால் இன்று கைதுசெய்யப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் குறித்து தகவல் வழங்க பொதுமக்கள் அச்சம் வெளியிட்டிருந்த நிலையில் நேற்று சம்பவம் தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தது.

இந்தநிலையில், இந்த விடயம் தொடர்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் கவனத்துக்கு மக்களால் கொண்டு செல்லப்பட்டது.

அதைத் தொடர்ந்து திலீபன் எம்.பி., உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையிலேயே சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்ததுடன் மேலதிக விசரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (100)


**புதிய பிரிவு A/L 2023 கணக்கீடு**

**திரு. க. பா. பாலகஜன்**

M.Com (Hons), B.Com (Jaf.),H.N.Dip.-in. ACC.,Dip.-in-Edu.

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்

கொழும்புத்துறை - சனி, ஞாயிறு
2.15 p.m - 3.30 p.m

கந்தர்மடம் - சனி, ஞாயிறு
7.00 a.m - 8.00 a.m

Zoom class - திங்கள்,வெள்ளி
7.30 p.m - 8.30 p.m

A/L 2021 & DAY, A/L 2022 வகுப்புகளும் நடைபெறுகின்றன.

புதிய அனுமதிகளுக்கு அழையுங்கள்.

**077 216 8884**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் மேலும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாற்பண்ணை - பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆய்வுகூடத்தில் ஆயிரத்து 3 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 129 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் திருநெல்வேலி பாற்பண்ணை கிராமத்தில் பாரதிபுரம் என்ற பகுதியில் 88 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 3 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 26 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தத் தொற்றாளர்களில் 20 பேர் யாழ்ப்பாணம் மாநகர சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இதன்மூலம் கடந்த 14 நாள்களில் யாழ்ப்பாணம் மாநகரக் கடைத்தொகுதிகளைச் சேர்ந்த 87 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது - என்றார்.

## அரசியல் கைதியின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேவராசா தேவராணி, அரசியல் கைதிகளின் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடி வருகின்றார். இவர் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஒழுங்குபடுத்தப்படும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு தனது கோரிக்கையைப் பதிவு செய்து வருகின்றார்.

அந்தவகையில், கடந்த செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கைதிகளுக்காகக் குரல் கொடுத்தார். அன்றைய தினம் இரவு இனந்தெரியாத நபர் ஒருவர் தொலைபேசி மூலம் அவரைத் தொடர்பு கொண்டு தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

பின்னர் தொடர்ச்சியாக வேறு தொலைபேசி இலக்கங்களிலும் இருந்து அச்சுறுத்தும் வகையில் அழைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதானால் பயமுற்று, தனியாக வசிக்கும் குறித்த தாய் குரலற்றவர்களின் குரல் அமைப்பிடம் குறித்த விடயத்தை தெரியப்படுத்தினார்.

அதையடுத்து குறித்த தாய் இன்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

இதற்கு முன்னரும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்துகொண்டால் இனந்தெரியாதவர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்கள் எனவும், தனியாக வசிக்கும் தனக்குப் பயமாக உள்ளது எனவும் குறித்த தாயார் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கு மறைமுகமாக அச்சுறுத்தல் விடுக்கும் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன. அவர்கள் வெளியில் சொல்வதற்கு மிகவும் பயப்படுகின்றார்கள். தமது உறவுகளின் விடுதலைக்காக ஜனநாயக ரீதியில் போராடும் உறவுகளை அச்சுறுத்தும் செயற்பாடுகள் வருத்தமளிக்கின்றன. - என்றுள்ளது.

## கடல் வழியாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தப் பகுதியில் பயணித்த சந்தேகத்துக்கிடமான 4 ஒட்டோக்களைச் சோதனையிட்ட போது, அதில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த 20 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டது எனவும், இவ்வேளையில் அவர்கள் படகு மூலம் வெளிநாட்டுக்குச் செல்லும் நோக்கில் சிலாவத்துறை கடற்கரையை நோக்கிப் பயணிக்கின்றனர் என்ற தகவல் வெளியானது எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அவர்கள் அனைவரையும் கைதுசெய்து சிலாவத்துறைப் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 14 ஆண்கள், 04 பெண்கள், 13 வயது சிறுமி மற்றும் 16 வயது சிறுவன் ஆகியோர் அடங்குகின்றனர்.

அவர்களில் முல்லைத்தீவைச் சேர்ந்த 9 பேரும், யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரைச் சேர்ந்த தலா 4 பேரும், வாழைச்சேனை, புத்தளம் மற்றும் வத்தளை ஆகிய இடங்களைச் சேர்ந்த தலா ஒருவரும் அடங்குகின்றனர்.

இவர்கள் பயணம் செய்த 4 ஓட்டோக்களும் சிலாவத்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## மாநகர சபை அமர்வை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உருவாக்கப்பட்டுள்ள 'மாநகர காவல் படை' தொடர்பில் தம்முடன் கலந்துரையாடப்படாமையே இன்றைய புறக்கணிப்பிற்கு காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசியலில் ஆர்வம் செலுத்துகின்ற இளைய தலைமுறையினருக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்பதற்காக சட்டத்தரணி மணிவண்ணனுக்கு ஆதரவு வழங்குவதற்கு எமது கட்சியின் தலைமை தீர்மானித்திருந்தது.

எவ்வாறெனினும், எமது கட்சியின் ஆதரவுடன் ஆதிகாரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அவை தொடர்பாக எம்முடனும் கலந்துரையாட வேண்டியது தார்மீகக் கடமையாகும்.

ஆனால் காவல்படை உருவாக்கம் தொடர்பாக எம்மோடு கலந்துரையாடப்படவில்லை. இதுதொடர்பில் எமது கரிசனையை வெளிப்படுத்தும் வகையிலேயே இன்றைய அமர்வுகளை புறக்கணித்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

## பனையால் வீழ்ந்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை சீவல் தொழிலுக்காக வீட்டிலிருந்து புறப்பட்ட அவர் பனை மரத்திலிருந்து விழுந்துள்ளார்.

அவர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் உயிரிழந்துள்ளார்.

## பெரும்பாலான வர்த்தக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அல்லது பணியாளர் உள்ள சுமார் 70 வர்த்தக நிலையங்களுக்கு யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

அவை தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மீளத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் மாநகர மத்திய பஸ் நிலையத்திலிருந்து இன்று தொடக்கம் பஸ் சேவைகளை நடத்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ் சேவைகளும் வழமை போன்று தரிப்பிடங்களிலிருந்து சேவையில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பஸ் சேவைகளிலும் உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனை மீறினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்காணிப்புக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும், கண்காணிப்புக் காவலர்களிடம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பாக இன்று யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று நாங்கள் யாழ். மாநகரத்தைத் தூய்மையாகவும் அழகாகவும் பேணுவதற்காக எங்களுடைய மாநகர சபை ஊழியர்களை ஒரு பணிக்காக அமர்த்தியிருந்தோம்.

அதுதொடர்பில் விளக்கமளிப்பதற்காக பத்திரிகையாளர் சந்திப்பின் ஊடாக அதனை மக்களுக்குக் கூறியிருந்தோம்.

உண்மையிலே யாழ். மாநகரத்தை அசிங்கப்படுத்துகின்ற, குப்பைகளை வீசியெறிகின்ற, பொது இடங்களில் வெற்றிலைதுப்புகின்றவர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக யாழ். மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றி அந்தத் தீர்மானத்தின் ஊடாக எவ்வளவு ரூபா தண்டப்பணமாக அறவிடுவது என்பதை வர்த்தமானியில் அறிவித்து அந்த வர்த்தமானி பிரசுரம் வெளியாகிய பின்னர் நாங்கள் எங்களுடைய வழமையான செயற்பாட்டில் ஒன்றாக விசேடமாக சிலரைப் பணிக்கு அமர்த்தியிருந்தோம்.

அதிலும் குறிப்பாக கண்காணிப்புக் காவலர்களாக நியமிக்கப்பட்ட இந்த ஐந்து ஊழியர்களும் சபையில் ஊழியர்களாகச் செயற்பட்டவர்களே. அவர்களையே இந்த விசேட பணிக்கு நாங்கள் நியமித்திருந்தோம்.

அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும்போது மக்கள் அவர்களை இலகுவாக அடையாளம் காணவேண்டிய தேவை இருந்தாலும், அவர்களுக்கு வேண்டத்தகாத பிரச்சினைகள் ஏற்படக்கூடாது என்பதற்காக சீருடை ஒன்றையும் அறிமுகப்படுத்தி வழங்கியிருந்தோம்.

இந்தச் சீருடை எதைப் பார்த்து நாங்கள் செய்தோம் என்றால் கொழும்பு மாநகர சபையில் இருக்கும் நடைமுறைகளைப் பின்பற்றித்தான். கொழும்பு மாநகர சபை பின்பற்றுகின்ற, பாவிக்கின்ற சீருடையையே நாங்களும் இந்த ஊழியர்களுக்கு வழங்குவது என யோசித்து அதே மாதிரியான சீருடையை வழங்கியிருந்தோம். இதில் வேறு எந்த உள்நோக்கமோ, திட்டமோ எங்களுக்கு இருக்கவில்லை.

இந்தச் சீருடை தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையின் சீருடை போன்று இருக்கின்றது எனச் சிலர் சொல்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரை சில இடங்களில் அது பொருந்தியிருக்கலாம். ஆனால், நாங்கள் கொழும்பு மாநகர சபையை முன்மாதிரியாகக் கொண்டே இதனைச் செய்திருந்தோம். - என்றார்.

## யாழ்ப்பாணம் மாநகர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது தேசிய பாதுகாப்புக் கருதி சில முடிவுகள் எடுக்கப்பட்டன எனவும், அவை விரைவில் வெளியாகும் எனவும் கூட்டத்தில் கலந்துகொண்ட முக்கிய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையால் மாநகரின் சுகாதார நடைமுறைகளைக் கண்காணித்தல், கழிவகற்றல் பொறிமுறையைக் கண்காணித்தல் மற்றும் மாநகரின் ஒழுங்கு உள்ளிட்டவற்றை கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட காவல் படையின் சீருடை விவகாரம் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சீருடை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைப் பகுதிகளுக்குள் காவல்துறையினர் பயன்படுத்திய சீருடையைப் போன்ற வர்ணத்தால் வடிவமைக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி சீருடைகள் தொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர், பிரதம வருமான வரிப் பரிசோதகர் மற்றும் குறித்த காவல் படையில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த மாநகர சபை ஊழியர்கள் ஐவர் உட்பட்ட 7 பேரிடம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றிரவு மூன்று மணி நேரத்துக்கும் மேலாக தொடர் விசாரணை நடைபெற்றது. யாழ். மாநகர மேயரும் நேற்றிரவு விசாரணைக்காக யாழ். பொலிஸ் நிலையத்தில் பிரசன்னமாகியிருந்தார். கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற பணிப்புக்கு அமைய குறித்த நடவடிக்கை முன்னெடுக்கபட்டது எனச் சொல்லப்பட்டது. இந்நிலையிலேயே இன்று பிற்பகல் அவசரமாகக் கூடிய தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் யாழ். மாநகர சபை விவகாரம் தொடர்பில் விசேடமாக ஆராயப்பட்டுள்ளது.

## கோண்டாவிலில் வயோதிபப் பெண் தொற்றால் மரணம்

யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளார் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் மேற்கு, காங்கேசன் துறை வீதியைச் சேர்ந்த 79 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார் என்றும் சிறுநீரக செயலிழப்பினால் அவர் உயிரிழந்துள்ளார் எனவும் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இது இப்போது தேவையா?

யாழ்ப்பாண மாநகர சபையின் மேயர் பதவியை மிகவும் இக்கட்டான சமயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கத்திலிருந்து, ஈ.பி.டி.பியின் உதவியுடன் பிடுங்கி எடுத்தவர் மேயர் வி.மணிவண்ணன்.

இன்னும் சுமார் ஒரு வருட காலம் அதனைக் கொண்டிழுத்து ஒப்பேற்ற வேண்டிய பொறுப்பு அவருக்கு உள்ளது.

தன்னுடைய அணியிலும் – கட்சியிலும் – உச்ச முரண்பாடு.

மற்றைய இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு, இழுபறிபடும் அரசியல் சூழலில், எந்தப் பக்கத்தாலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவது இக்கட்டு என்ற சூழலில், நிர்வாகத்தைக் கொண்டு நடத்த வேண்டிய நிலைமை அவருக்கு.

உள்ளூராட்சிச் சபை நிர்வாக நடைமுறைகளின்படி, அடுத்த ஓராண்டுக்குள் – யாழ் மாநகர சபையின் தற்போதைய தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பதவிக் காலம் முடிவதற்குள் – பதவியில் இருக்கும் மேயர் மணிவண்ணனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தோ அல்லது வேறு வழிமுறைகளிலோ அவரைப் பதவியில் இருந்து அகற்ற முடியாது. அதற்கு வாய்ப்பில்லை.

அப்படி வாய்ப்பில்லை என்பதற்காக மேயர் மணிவண்ணனும் விட்டேத்தியாக, பொறுப்பின்றி நடக்க முடியாது. தன் தலையில் தானே மண் அள்ளிப் போடவும் கூடாது. அல்லது மக்களுக்கு வெறுமனே அரசியல் 'ஸ்டண்ட்' படமும் காட்ட முயலவும் கூடாது.

மாறாக, சபையில் முரண்பட்ட அரசியல் தரப்புகளை ஒவ்வொரு விடயத்திலும் ஏதோ ஒரு புள்ளியில் இணக்கத்துக்கு – இசைவுக்கு – கொண்டு வந்து, சபையின் முழு ஆதரவோடு அன்றாடக் காரியங்களை முன்னெடுக்க வேண்டும்.

அதுவும், தென்னிலங்கையில் பௌத்த – சிங்களப் பேரினவாத வெறியில் ஒவ்வொரு காரியங்களையும் அணுகும் மேலாண்மைத் திமிர் அரசாங்கமே அதிகாரத்தில் உள்ளது. இங்கு தமிழர் தாயகத்தில் ஒவ்வொரு காரியத்தையும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டது போல நுணுக்கமாக – நுட்பமாக – அதன் கட்டமைப்புகள் அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தச் சமயத்தில் இங்கு பொறுப்புள்ள பதவிகளில் இருப்போர் – குறிப்பாக மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டு பதவிகளில் இருப்போர் – மிகக் கவனமாகவும் மிக சாதுரியமாகவும், புத்திபூர்வமாகவும் செயற்படுவது மிகவும் முக்கியம்.

அதுவும் மணிவண்ணன் போன்ற மேயர் பதவியில் இருப்பவர்கள், சர்ச்சைக்குரிய – அரசியல் சிக்கல்களுக்குரிய – விடயங்களில் தீர்மானம் எடுக்கும் போது இரண்டு பாதுகாப்புக் கவசங்களை தங்களுக்குரியவையாக அவதானித்துக் கொள்ள வேண்டும்.

ஒன்று – சட்டப் பாதுகாப்பு.

மற்றையது – குறைந்தபட்சம் தனது சபையில் முரண்பட்டு நிற்கும் பிரதான இரண்டு தரப்புகளில் ஒன்றின் ஆதரவுடன் கூடிய பாதுகாப்பு.

சாதாரண பாதுகாப்புச் சேவை நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பதாயின் கூட பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெற வேண்டும் என்ற சட்ட விவகாரம் சட்டத்தரணியான மேயர் மணிவண்ணனுக்குத் தெரியாததல்ல.

ஆகவே, யாழ் மாநகர காவல் படை என்ற அறிவிப்புடன் சீருடை தரித்த ஓர் அணியைப் பிரகடனம் செய்வது என்பதை, தனது அணியில் ஓரிருவருடன் மட்டும் மந்திராலோசனை செய்து, சத்தம், சந்தடியின்றி 'அரசியல் ஸ்டண்ட்' அறிவிப்பாக விடுப்பது என்பது பல தொடர் விளைவுகளைத் தரக் கூடியது என்பது அவருக்குத் தெரியாததல்ல.

இத்தகைய ஒரு நடவடிக்கையை 'அரசியல் ஸ்டண்ட்' ஆக முன்வைக்க முன்னர், குறைந்தபட்சம் இவ் விடயத்தில் சார்பான அரசியல் தரப்புகளுடன் கலந்தாலோசனை நடத்தியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் இவ்வளவு கரிசனைக்குரிய விடயத்தை சிறுபிள்ளைத்தனமாக அணுகியிருக்கவே கூடாது என்பது நமது கருத்து.

தேவையில்லாமல், யாழ் மாநகர சபையின் செயற்பாடு குறித்து பாதுகாப்புச் சபையில் ஆராயும் அளவுக்கு விபரீதமாக நடந்து கொண்டிருக்கத் தேவையில்லை.

இத்தகைய திட்டம் ஒன்றை முன்னெடுப்பதாயின் அது குறித்து கலந்துரையாடி, மாநகர மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, மாநகர சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் நகர்த்தியிருந்தால் அதில் அர்த்தமிருந்திருக்கும்.

நோக்கம் நல்லதாக இருந்தாலும் வழிமுறைக்கு உரிய ஆதரவும், பாதுகாப்பும், வரவேற்பும் அவசியம்.

மணிவண்ணனை அதிகாரத்துக்குக் கொண்டு வந்த ஈ.பி.டி.பியும் இந்த விடயத்தில் அவருடன் இல்லை. அவரது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அவருக்கு ஆதரவாக இல்லை. மற்றைய பிரதான தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த விடயத்தில் அவருக்கு முதுகு கொடுக்கத் தயாரில்லை.

அத்தகைய பின்புலத்தில் இத்தகைய 'ரிஸ்க்' தரும் நடவடிக்கை – அதுவும் திடுதிப்பென வேகத்தில் அவருக்கு தேவை தானா?

# முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மீது கத்தோலிக்கருக்கு நம்பிக்கை வேண்டும்

## சரத் வீரசேகர தெரிவிப்பு



ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை எதிர்வரும் 21 ஆம் திகதிக்குள் செயற்படுத்தாவிடின் வீதிக்கிறங்கிப் போராடுவதாக மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளமையை ஏற்றுக் கொள்கிறோம்.

கத்தோலிக்க மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடிகிறது. குற்றவாளிகளை சட்டத்தில் முன்னிலைப்படுத்த முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் மீது கத்தோலிக்க மக்கள் நம்பிக்கைகொள்ள வேண்டும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொது மக்கள் அச்சமின்றிய வகையில் வாழும் சூழலை ஏற்படுத்துவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எதிர்பார்ப்பாகும். இதற்காகவே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது.

கடந்த காலத்தை காட்டிலும் தற்போது தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் சேவையை ஒழுக்கமான முறையில் செயற்படுத்த உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தற்போது 491 பொலிஸ் நிலையங்கள் நாடு தழுவிய ரீதியில் காணப்படுகின்றன.

மேலதிகமாக 197 பொலிஸ் நிலையங்களை ஸ்தாபிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டன.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல வழிமுறைகளில் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் உள்ள போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்க பாடசாலை மட்டத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவுப்படுத்த ஒரு பாடசாலையில் சேவையாற்றும் இரண்டு ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படும்.

ஒரு கிராம் ஹெரோயின் போதைப்பொருளை தம் வசம் வைத்திருக்கின்றமை மரண தண்டனைக்குரிய குற்றம் என்பதை பாடசாலை மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இலங்கைக்குள் போதைப்பொருள் கொண்டுவருவதைத் தடுக்க கடற்படையினர் விசேட திட்டங்களைத் தற்போது முன்னெடுத்துள்ளார்கள்.

கேள்வி: ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு பின்னர் கத்தோலிக்க மக்கள் வீதிக்கிறங்கி போராடவுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த விடயம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு?

பதில்:- போராட்டங்களில் ஈடுபடும் உரிமை அனைத்துத் தரப்பினருக்கும் உண்டு. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்கள் சார்பில் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிடும் கருத்துக்களை உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ் திணைக்களம் முன்னெடுத்த விசாரணை அறிக்கை, ஜனாதிபதி விசாரணை அறிக்கை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணை அறிக்கை ஆகிய அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக சட்டமா அதிபர் உரிய நவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. ஆகவே, விசாரணை அறிக்கைகள் மீதும், முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் மீதும் கத்தோலிக்க மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

# 13.6 கோடி வைத்திருந்த 27 வயது இளைஞன் கைது

13.6 கோடி ரூபாய் பணத்தை தனது வங்கிக் கணக்கில் கொண்டிருந்த 27 வயது டைய இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

இரத்மலானை பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரி வித்தார்.

குறித்த இளைஞனின் வங்கிக் கணக்கிற்கு வெளிநாட்டில் இருந்து குறித்த பணத் தொகை வைப்பிலிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கெரலின் ஜூரி கைது!



2020 ஆம் ஆண்டின் திருமதி உலக அழகியாக மகுடம் சூட்டிய இலங்கையை சேர்ந்த கெரலின் ஜூரி கைது செய்யப்பட்டுள்ளார்.

கறுவாத்தோட்டம் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும், அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

# திருமலை அரச அதிபருக்கு எதிரான கருத்துக்களுக்கு ஆட்சேபித்து செயலக உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்



திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சனக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் பரவி வரும் தவறான கருத்துப் பரிமாற்றங்களுக்கு எதிர்ப்புத்தெரிவித்து திருகோணமலை மாவட்ட செயலக அரச அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று (புதன்கிழமை) மதிய உணவு வேளையில் செயலகத்துக்கு முன்பாக ஒன்று கூடிய அரச ஊழியர்கள் அமைதியான முறையில் சமூக இடைவெளியைப் பேணி பதாதைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அரசாங்க அதிபருக்கு எதிரான குறித்த செயலை தாம் வன்மையாகக் கண்டிக்கின்றனர் எனத் தெரிவித்த அவர்கள் இவ்வாறான தவறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியாக வாகனத்தில் பயணிப்பவரும் முகக் கவசம் அணிய வேண்டும்

## டெல்லி அரசின் உத்தரவை உறுதி செய்த நீதிமன்றம்

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த டெல்லி மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பொது இடங்களுக்கு சொந்த வாகனத்தில் தனியாகச் சென்றாலும் முகக்கவசம் அணிவது கட்டாயம் என கடந்தாண்டு ஏப்ரலில் டெல்லி அரசு உத்தரவிட்டது. முகக்கவசம் அணியாமல் சென்றவர்களிடம் அபராதம் வசூலித்தது. 4 வழக்கறிஞர்கள் இந்த உத்தரவுக்கு எதிராக டெல்லி உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். இந்த வழக்கு நீதிபதி பிரதீபா சிங் முன் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கிற்கான தீர்ப்பினை வழங்கியபோது, 'தொற்று காலத்தில் முகக்கவசம் அணிவது பாதுகாப்பானது. இதன் மூலம், தொற்று பரவாமல் தற்காத்துக் கொள்வதோடு, பிறருக்கும் பரவாமல் இருப்பது உறுதி செய்யப்படுகிறது. முகக்கவசம் அணியும் ஒற்றை நடவடிக்கையின் மூலம் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படும். வாகனங்களில் தனியாக பயணித்தாலும் அவர் வெளியுலக தொடர்பில் இருப்பதாகவே கருதப்படும். அவரால் மற்றவர்களுக்கு தொற்று பரவாது என்று கூற முடியாது. தனியாக தனது காரில் சென்றாலும் ஒருவர் பொது இடத்தில் இல்லை என்று கூற முடியாது. எனவே, அவர் கொரோனாத் தடுப்பூசி போட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும்' என்று நீதிபதி பிரதீபா சிங் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியர்கள் அனைவருக்கும் தடுப்பூசி வழங்க வேண்டும்

## ராகுல் காந்தி டுவிட்டரில் வலியுறுத்து

அனைத்து இந்தியர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து டுவிட்டரில் கொவிட் வக்சின் என்ற ஹாஷ்டக்குடன் ராகுல் பதிவிட்டுள்ளார். இந்தியாவில் தற்போது கொரோனா இரண்டாவது அலை கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. அதே நேரம் 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அனைத்து இந்தியர்களுக்கும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளும் வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற ரீதியில் ராகுல் காந்தியின் பதிவு அமைந்துள்ளது. முன்னதாக மத்திய சுகாதாரத் துறை, கொரோனாத் தடுப்பூசி தேவைப்படுபவர்களுக்கு அது செலுத்தப்படும் என்றும் அதை விரும்பாதவர்களுக்கு வலுக்கட்டாயமாக வழங்கப்படாது என்றும் தெரிவித்திருந்தது.

# 1,26,789 பேருக்கு ஒரே நாளில் தொற்று



இந்தியாவில் இதுவரை இல்லாத அளவாக ஒரே நாளில் 1,26,789 பேருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1.67 லட்சத்தை நெருங்கியுள்ளது. அதே போல், பாதிப்பு 1.29 கோடியைத் தாண்டியது.

கடந்த 24 மணி நேரத்தில், நாட்டில் கொரோனாவால் புதிதாக பாதித்தவர்கள், குணமடைந்தோர், பலியானோர், இறப்பு விகித நிலைவரம் குறித்து மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் மொத்த உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,66,862 ஆக உயர்ந்துள்ளதாகவும் தொற்றில் இருந்து ஒரே நாளில் 59,258 பேர் குணமடைந்தனர் எனவும் இதனால் குணமடைந்தோர் எண்ணிக்கை 1,18,51,393 ஆக உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 9,10,319 பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்றும் குணமடைந்தோர் வீதம் 91.67% ஆக உயர்ந்துள்ளதோடு உயிரிழந்தோர் விகிதம் 1.29% ஆக அதிகரித்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 1.71 கோடி பேர் வாக்களிக்கவில்லை சென்னையில் வாக்களிப்பு 59.06 வீதம் மட்டுமே!

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்குப்பதிவில் 72.78 சதவீத வாக்குகள் பதிவாகின. அதில் சென்னையில் மிகக் குறைவாக 59.06 சதவீத வாக்குகளும், அதிகபட்சமாக கரூரில் 83.92 சதவீத வாக்குகளும் செலுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தில் மட்டும் சுமார் 1 கோடியே 71 லட்சம் பேர் வாக்களிக்கவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

தமிழகத்தில் மொத்தமுள்ள 234 சட்டசபை தொகுதிக்கும், கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கும் ஒரே கட்டமாக நடைபெற்ற தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் என மொத்தம் 3,998 பேர் போட்டியிட்டனர். தமிழகத்தில் அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடந்தாலும், சில இடங்களில் மட்டும் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டன. தேர்தல் ஆணையம் சார்பில் வீடுகளுக்கே சென்று வாக்களர் அட்டை வழங்காததால் நிறைய வாக்காளர்கள் தாங்கள் எந்த மையத்துக்கு சென்று வாக்களிக்க வேண்டும் என்று தெரியாமல் தடுமாறியதாகக் கூறப்படுகிறது.

தமிழகத்தில் காலை 7 மணியில் இருந்தே விறுவிறுப்பான வாக்குப்பதிவு நடைபெற்றது. கொரோனா நோயாளிகள் வாக்களிக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மே 2 ஆம் திகதி காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பதிவாகியுள்ள வாக்குகளின் விபரங்களை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். "தமிழகத்தில் மொத்தம் 72.78 சதவீதம் வாக்குகள் பதிவாகி உள்ளன. இது இறுதி நிலைவரம் ஆகும். அதிகபட்சமாக கரூரில் 83.92 சதவீத வாக்குகளும் குறைந்த அளவாக சென்னையில் 59.06 சதவீத வாக்குகளும் பதிவாகி உள்ளன" என்று அவர் கூறியுள்ளார்.

தமிழகம் முழுவதும் 6.28 கோடி வாக்காளர்கள் இருந்தும் 72.78 சதவீதம் பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர். அதன்படி பார்த்தால் தமிழகத்தில் 4 கோடியே 57 லட்சத்து 56 ஆயிரத்து 753 பேர் வாக்களித்துள்ளனர் என்பதும் 1 கோடியே 71 லட்சத்து 13 ஆயிரத்து 202 பேர் வாக்களிக்கவில்லை என்பதும் தெரியவந்துள்ளது. அதேபோன்று, மிகக் குறைந்த அளவாக சென்னையில் 59.06 சதவீதம் பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர். சென்னையில் மட்டும் 40,57,061 வாக்காளர்கள் உள்ளனர். அதன்படி பார்த்தால் 23 லட்சத்து 96 ஆயிரத்து 100 பேர் வாக்களித்துள்ளனர். 16 லட்சத்து 60 ஆயிரத்து 960 பேர் வாக்களிக்கவில்லை. சென்னையில் மட்டும் ஒவ்வொரு தேர்தலிலும் 60 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகள் மட்டுமே பதிவாகி வருவது வாடிக்கையாக உள்ளது.

அதேநேரம் சென்னை உள்ளிட்ட நகர்ப்பகுதிகளைத்தவிர கிராமப்புறங்களில் வாக்காளர்கள் தொடர்ந்து வாக்களிக்க ஆர்வமாக உள்ளதால் அங்கெல்லாம் வாக்குச் சதவீதம் அதிகரித்துள்ளது. தற்போது தமிழகத்தில் கொரோனா நோயாளிகள் 30 ஆயிரத்துக்கும் மேல் இருந்தாலும், அவர்களில் சில நூறு பேர் மட்டுமே வந்து வாக்களித்ததாக கூறப்படுகிறது. இது போன்ற சில பிரச்சினைகளால் தமிழகத்தில் வாக்கு சதவீதம் குறைந்துள்ளதாக பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# அமித்ஷாவின் உத்தரவில் வாக்காளர்களுக்கு தொல்லை தேர்தல் பிரசாரத்தில் மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு

மேற்கு வங்க மாநிலத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் உத்தரவின்பேரில் வாக்காளர்களுக்கு சி.ஆர்.பி.எப். வீரர்கள் தொந்தரவு தந்ததாக முதல்வர் மம்தா பானர்ஜி குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில் மொத்தம் 8 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. நேற்று முன்தினம் மூன்றாவது கட்ட தேர்தல் நடந்து முடிந்த நிலையில் நான்காவது கட்ட வாக்குப்பதிவு நடக்கவிருக்கும் பகுதிகளில் முதல்வர் மம்தா பானர்ஜி நேற்று பிரசாரம் மேற்கொண்டார். கூச் பிகார் மாவட்டத்தில் பிரசாரத்தில் அவர் பேசியபோது, வாக்குப் பதிவு மையங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த மத்திய ரிசர்வ் பொலிஸ் படை வீரர்கள் வாக்களிப்பதற்காக வந்த பெண்களுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளனர். வாக்காளர்கள் வாக்களிப்பதை தடுத்துள்ளனர். மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உத்தரவின் பேரில் இதுபோன்று செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையந்தான் தேர்தல் நிர்வாகத்தை நடத்தி வருகின்றது. மாநிலத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருக்கும் சி.ஆர்.பி.எப் .வீரர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டும் என்று குற்றச்சாட்டினை முன்வைத்திருக்கிறார்.

இதே வேளை, கடந்த 3 ஆம் திகதி ஹூக்ளியில் தேர்தல் பிரசாரத்தின் போது மம்தா பானர்ஜி, "முஸ்லிம் வாக்காளர்கள் தங்கள் வாக்குககளை சிதற விட்டுவிடக் கூடாது. பா.ஜ.கவுக்கு எதிராக அனைவரும் ஒன்று சேர வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார். இது தேர்தல் நடத்தை விதிமீறல் என பா.ஜ.க. சார்பில் தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக அடுத்த 48 மணி நேரத்தில் மம்தா விளக்கமளிக்க வேண்டுமென தலைமை தேர்தல் ஆணையம் நேற்று நோட்டீஸ் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நக்சல்கள் பிடியிலிருக்கும் வீரரின் புகைப்படம் வெளியீடு

சட்டீஸ்கரில் தம்மால் கொண்டு செல்லப்பட்ட அதிரடிப்படை வீரரின் புகைப்படத்தை நக்சல்கள் வெளியிட்டுள்ளனர். சட்டீஸ்கர் மாநிலம், பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள காட்டுப் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி பாதுகாப்புப் படையினர் மீது நக்சல்கள் நடத்திய தாக்குதலில் 22 வீரர்கள் மரணமடைந்தனர். இந்தச் சண்டையின் போது, நக்சல்களுக்கு எதிரான நடவடிக்கை எடுத்து வரும் 'கோப்ரா' சிறப்பு அதிரடிப்படையை சேர்ந்த கமாண்டோ வீரர் ராகேஷ்வர் சிங் மன்ஹாஸ் காணாமல் போனார்.

அவரை பாதுகாப்புப் படைகள் தீவிரமாக தேடி வரும் நிலையில், அவர் தங்களின் பிடியில் இருப்பதாக நேற்று முன்தினம் இரவு நக்சல்கள் அறிவித்தனர். இது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் அறிக்கை வெளியிட்ட அவர்கள், அவரை விடுப்பது தொடர்பாக பேச்சுக்களை நடத்த மத்தியஸ்தர் குழுவை ஏற்படுத்தும்படி சட்டீஸ்கர் அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளனர்.

இந்நிலையில், ராகேஷ்வர் தங்களின் பிடியில் இருக்கும் புகைப்படத்தை நக்சல்கள் நேற்று வெளியிட்டனர். அதில் அவர், அடையாளம் தெரியாத இடத்தில் பனை ஓலையால் கட்டப்பட்ட குடிசையில் அமர்ந்துள்ளார். இந்த புகைப்படம் மற்றும் நக்சல்கள் வெளியிட்ட அறிக்கையின் நம்பகத்தன்மை குறித்து காவல் துறையினர் விசாரித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

கமாண்டோ வீரர் ராகேஷ்வர் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவர். அவரை நக்சல்களின் பிடியில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி அவருடைய குடும்பத்தினர் ஜம்மு – பூஞ்ச் நெடுஞ்சாலையில் நேற்று சாலை மறியலில் ஈடுபட்டனர். அங்கே ஊடகங்களைச் சந்தித்த ராகேஷ்வரின் மனைவி மீனு கூறுகையில், "எனது கணவர் அரசின் பொறுப்பில் இருக்கிறார். எனவே, அவர் பாதுகாப்பாக வீடு திரும்புவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமை" என்று தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தகாலத்தை உற்சாகமாக வரவேற்று துள்ளிக் குதித்து சண்டையிட்ட முயல்கள்



இங்கிலாந்தில் வயல்வெளியில் இரு முயல்கள் இரு கால்களால் துள்ளிக் குதித்து சண்டையிட்டுக் கொள்ளும் வீடியோ இணையத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நார்ஃபோல்க் என்ற இடத்தில் தற்போது வசந்தகாலம் என்பதால் புல்வெளிகள் பச்சைப் பசேல் என காட்சியளிக்கின்றன. இந்நிலையில் அங்கு வசித்து வந்த இரு முயல்கள் செல்லமாகச் சண்டையிடத் தொடங்கின.

நேரம் செல்லச் செல்ல குத்துச் சண்டை வீரர்கள் போல இரு கால்களால் குதித்து குதித்து சண்டையிட்டுக் கொண்டன. இந்த காட்சி இணையத்தில் அதிகம் பேரால் பார்க்கப்பட்டு வருகிறது.



## சலனமற்ற நீருக்குள் ஜிம்னாஸ்டிக் செய்யும் நீச்சல் வீராங்கனை

ரஷ்யாவைச் சேர்ந்த நீச்சல் வீராங்கனை ஒருவர் தண்ணீருக்குள் ஜிம்னாஸ்டிக் செய்த வீடியோ இணையத்தில் வேகமாகப் பரவி வருகிறது.

ரஷ்யாவைச் சேர்ந்த கிறிஸ்டினா மகுஷென்கொ (Kristina Makushenko) என்பவர் புகழ் பெற்ற நீச்சல் வீராங்கனையாக உள்ளார். இவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புதிய வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் சலனமற்ற நீருக்கடியில் இசைக்கேற்ப வளைந்து நெளிந்து ஜிம்னாஸ்டிக் செய்யும் காட்சிகள் தற்போது இணையத்தில் அதிகம் பேரால் பார்க்கப் பட்டும், பகிரப்பட்டும் வருகின்றது.

## பிரேஸிலில் கொரோனா ஒரே நாளில் 4,195 பேர் பலி

கொரோனா வைரஸ் பாதிப்பில் உலக அளவில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக 2 ஆவது இடத்தில் இருக்கும் நாடு பிரேஸில். அங்கு கொரோனா பாதிப்பு 11/2 கோடியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஆனாலும் அந்த நாட்டின் அதிபர் ஜெயீர் போல்சனாரோ வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகள் எதையும் எடுக்காமல் அலட்சியம் காட்டி வருகிறார்.



இந்த சூழலில் கடந்த சில வாரங்களாக அங்கு கொரோனா உயிரிழப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு இடம் இல்லாமல் ஆஸ்பத்திரியிலேயே உடல்களை கிடத்தி வைக்கும் அவல நிலையும் அங்கு உள்ளது.

இந்த நிலையில் பிரேசிலில் வைரஸ் பரவ தொடங்கியதில் இருந்து இதுவரை இல்லாத வகையில் நேற்று ஒரே நாளில் 4 ஆயிரத்து 195 பேர் கொரோனாவுக்கு பலியாகினர்.

இதனால் அந்த நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 37 ஆயிரத்து கடந்துள்ளது.

ஆனால் இப்போதும் கூட அதிபர் ஜெயீர் போல்சனாரோ, கொரோனாவை கட்டுப்படுத்த ஊரடங்கை அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்.

ஊரடங்கால் ஏற்படும் பொருளாதாரத்தின் சேதம் வைரஸின் விளைவுகளை விட மோசமாக இருக்கும் என அவர் கூறுகிறார்.

## கொரோனா அதிகரிப்பின் எதிரொலியாக இந்திய பயணிகளுக்கு நியூஸிலாந்து தடை



இந்தியாவில் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் இந்தியப் பயணிகளுக்கு நியூஸிலாந்து வர அனுமதியில்லை என்று அந்நாட்டுப் பிரதமர் ஜெசிந்தா அறிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வரும் பலருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக கூறி நியூஸிலாந்து அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஏப்.11 முதல் 28 வரை இந்தியாவில் இருந்து வரும் பயணிகள் நியூஸிலாந்தில் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## துருக்கி ஆட்சிக் கவிழ்ப்பில் பங்காற்றிய 22 ராணுவ வீரர்களுக்கு ஆயுள் தண்டனை



துருக்கியில் ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்ட 22 இராணுவ வீரர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

துருக்கியில் அதிபர் எர்டோகனை பதவியில் இருந்து நீக்கும் முயற்சியாக கடந்த 2016 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி நடந்தது. இம்முயற்சியில் 248 பேர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் அந்த முயற்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் ஆட்சிக் கவிழ்ப்பில் தொடர்புடையதாக 497 இராணுவ வீரர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அவர்கள் மீதான வழக்கு விசாரணை முடிந்ததைத் தொடர்ந்து 22 வீரர்களுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.



ரோமானியா நாட்டில், ரோம்சில்வா (Romsilva) மாகாணத்தில் உள்ள தேசிய பூங்கா நிர்வாகம் அண்மையில் எடுக்கப்பட்ட அரிய காட்சியை இணையத்தளத்தில் வெளியிட்டது.

பச்சை பசேலென்று நிற்கும் மரங்களுக்கு மத்தியில் சூரிய மறைவின் போது தோன்றிய முழு நிலா காண்போரின் உள்ளத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக இருந்ததாக இணையத்தள வாசிகள் பதிவிட்டு வருகின்றனர்.

## எங்கள் நாட்டில் கொரோனா வைரஸே இல்லை உலக சுகாதார அமைப்பிடம் வடகொரியா தகவல்

உலக நாடுகளிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள கிழக்கு ஆசிய நாடான வட கொரியா, கொரோனா வைரஸ் பரவ தொடங்கியதில் இருந்தே தங்கள் நாட்டில் ஒருவருக்கு கூட வைரஸ் தொற்று இல்லை என கூறி வருகிறது. ஆனால் மோசமான சுகாதார கட்டமைப்பைக் கொண்ட வடகொரியாவில் வைரஸ் பாதிப்பு இல்லை என கூறப்படுவது நம்ப முடியாத ஒன்று என சர்வதேச நிபுணர்கள் கூறுகின்றனர். எனினும் கடுமையான கட்டுப்பாடுகள் மூலம் வைரஸ் பரவலை தடுத்ததாக வட கொரியா கூறுகிறது.

இந்த நிலையில் இப்போது வரை தங்கள் நாட்டில் கொரோனா வைரஸ் இல்லை என வடகொரியா உலக சுகாதார அமைப்பிடம் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் வடகொரியாவுக்கான பிரதிநிதி எட்வின் சால்வடார், கூறுகையில், கடந்த ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி வடகொரியாவில் 23 ஆயிரத்து 121 பேருக்குக் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதன் முடிவில் யாருக்கும் வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதியானது. கடந்த மார்ச் 26 ஆம் திகதி முதல் ஏப்ரல் 1 ஆம் திகதி வரை 732[illegible] பேருக்கு பரிசோதனை



செய்யப்பட்டது. ஆனால், அதன் முடிவுகளையும் உலக சுகாதார அமைப்பிடம் வடகொரியா வழங்க மறுக்கிறது. எத்தனை பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள், அறிகுறிகளுடன் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதைக் கூற அரசு மறுக்கிறது என்றார்.

இதனிடையே தலைநகர் பியாங்யாங்கில் நடைபெற்ற அரசியல் மாநாடு ஒன்றில் பேசிய அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் அன், ஏற்கனவே சர்வதேச நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு மத்தியில் கொரோனா கட்டுப்பாடுகளால் உருவான பொருளாதார இழப்பு நாட்டை மிக மோசமான நிலைக்கு கொண்டு சென்றுள்ளதாக கவலை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சீன ஆக்கிரமிப்பினால் சிங்கள சமூகத்திற்குள் கிளர்ச்சியொன்று உருவாகும் - சாணக்கியன்



கொழும்பு, ஏப். 08

சீன ஆக்கிரமிப்பினால் எதிர்காலத்தில் சிங்கள சமூகத்திற்கு இடையிலேயே கிளர்ச்சியொன்று உருவாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'இலங்கையர்கள் குறித்து வெளிநாட்டவர் மத்தியில் நல்லதொரு எண்ணப்பாடு உள்ளது. இலங்கையர்கள் இரக்கம் கொண்டவர்கள், நல்லவர்கள் என்ற நல்லதொரு விம்பம் உள்ளது.

இலங்கையர்கள் வெளிநாட்டவர்களிடம் அன்பாக இருந்தாலும் கூட சக இலங்கையர்களிடம் அவ்வாறு இருப்பதில்லை. 1949 ஆம் ஆண்டில் அப்போதைய மலையக இலங்கையர்களை நாட்டில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டபோதே இது வெளிப்பட்டது.

தமிழர்கள் என்ற பாகுபாடு பார்க்காது நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு இவர்களை கொண்டு முன்னெடுத்து செல்வது என நினைத்துப்பார்க்காது வெளியேற்றினர். பிற்பட்ட காலத்திலும் தமிழர்கள் வெளியேறினர், பறங்கியர்கள் வெளியேறினர். இறுதியாக நாட்டில் எஞ்சியது ஒன்றும் இல்லை.

வெவ்வேறு காலகட்டத்தில் இந்த அரசியல் இடம் பெற்றது, தேசிய ரீதியில் தமிழர்கள் கல்வி கற்க முடியாது, விவசாயம், ஏனைய வியாபாரங்களில் ஈடுபட முடியாத நிலைமை உருவாக்கப்பட்டது. அவர்கள் நாட்டை விட்டு வெளியேறி இன்று வெவ்வேறு நாடுகளில் நல்ல நிலைமையில் உள்ளனர்.

முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன. அவர்கள் சிறந்த வியாபாரிகள், அவர்களை வைத்து நாட்டின் வியாபரத்தை எவ்வாறு முன்னேற்றுவது என்பது குறித்து ஆராய வேண்டும் அதனை விடுத்து அவர்களை மோசமாக விமர்சித்து அவர்களுக்கு எதிராக பெரும்பான்மை சமூகத்தை தூண்டிவிடுகின்றனர்.

## மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள்

பிலவ வருட தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு காலத்தில் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் கொரோனாத் தொற்று தொடர்பான அச்ச உணர்வு முழுமையாக நீங்காத நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கொரோனாப் பரவலை கருத்திற் கொண்டு மக்களை மிகுந்த அவதானத்துடனும், பொறுப்புணர்வுடனும் செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புமாவட்டத்தில்கொரோனாத் தாக்கம் குறைவடைந்து வரும் நிலை காணப்பட்டாலும், தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டு காலங்களில் அதிக சன நெரிசல் காணப்படுவதனால் அவ்வாறான இடங்களிற்கு செல்லும் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுமாறும், அது அவர்களுக்கும் அவர்களது சுற்றத்தாருக்கும் ஒட்டு மொத்த சமூகத்திற்கும் நன்மையளிக்கும் என்பதால் பொதுமக்களின் ஒத்துழைப்பை மிக வினயமாக வேண்டப்படுவதாக அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனவே மக்கள் இவ் விசேட பண்டிகைக் காலங்களில் சனநெரிசல் அதிகமான இடங்கள் மற்றும் ஆலயங்கள் போன்றவற்றிற்கு செல்வதை இயன்றளவு தவிர்த்து வீட்டிலிருந்தவாறே தத்தமது குடும்பத்தாருடன் மத வழிபாடுகளில் ஈடுபடுமாறும், அவசர தேவைகளுக்காக மாத்திரம் வெளியில் செல்வது சாலச் சிறந்ததாக அமையுமெனவும், அவ்வாறு செல்லும் போது கண்டிப்பாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றல் வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இம்முறையும் எளிமையான முறையில் பண்டிகைகளை பொது மக்கள் கொண்டாடுவது தான் கொரோனாத் தொற்றை குறைத்துக்கொள்ள ஏதுவாக இருக்கும் என சுகாதாரத் துறையினர் மக்களுக்கு தொடர்ச்சியாக ஆலோசனை வழங்கி வருகின்றனர்.



கொரோனாத் தொற்றினை நமது இலங்கையில் இருந்து இல்லாது ஒழிப்பதற்கு ஒவ்வொரு தனி மனிதனும் தங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி விரைவில் நமது நாட்டை கொரோனா அற்ற நாடாக மாற்றி இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பை வழங்குவது அவசியமாகும்.

## சமுர்த்தி வங்கி ஏற்பாட்டில் சமுர்த்தி அபிமானி சந்தை



தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தி அபிமானி 2021 சித்திரை புத்தாண்டு விற்பனை சந்தை, மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தின் கரவெட்டி சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் ஆயித்தியமலையில் நேற்று, இன்று இடம்பெற்றது

இச் சந்தையில் உள்ளூர் வியாபாரிகள், சமுர்த்தி உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருள்கள், மற்றும் கூட்டுறவுச்சங்கங்களின் ஊடாக விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு பிரதேச மக்களின் நன்மை கருதி சகாய விலையில் விற்பனை செய்யப்பட்டது

சமுர்த்தி வங்கி முகாமையாளர் பிரியதர்சினி அசோக்குமார் தலைமையில் ஆயித்தியமலையில் நடைபெற்ற இவ் ஆரம்ப நிகழ்வில், பிரதேச செயலாளர் எஸ். சுதாகர், உதவி பிரதேச செயலாளர் எஸ். சுபா, மாவட்ட சமுர்த்தி பிரதிப்பணிப்பாளர் அ. பாக்கியராஜா, மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் எஸ். சண்முகராஜா, பிரதி தவிசாளர் பி. செல்லத்துரை, சமுர்த்தி தலைமை முகாமையாளர் கலைச்செல்வி, முகாமைத்துவப் பணிப்பாளர் தங்கத்துரை மற்றும் ஆயித்தியமலை பொலிஸ் பொறுப்பதிகாரி, பிரதேச சபை செயலாளர், பிரதேசபை வட்டார உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் சமுர்த்தி வங்கி, வலயப் பிரிவுகளின் நெறிப்படுத்தலுக்கமைவாக மக்களின் நலன்கருதி இந்த புத்தாண்டு சந்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கி, இறைச்சியுடன் 33 வயது குடும்பஸ்தர் கைது



திருகோணமலை, மூதூர்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பட்டித்திடல் பகுதியில், நாட்டுத் துப்பாக்கிகள் இரண்டுடன் குடும்பஸ்தர் ஒருவர், இன்று (08) காலை கைதுசெய்யப்பட்டுள்ளார் என மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

தோப்பூர், பட்டித்திடல் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காட்டில் சட்டவிரோதமாக வேட்டையாடப்பட்ட மான் இறைச்சி 2 கிலோகிராம், தேவாங்கு இறைச்சி 1 கிலோகிராம் மற்றும் 2 கத்திகள் என்பனவும் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டீ.எம்.ஐ.கே. திஸாநாயக்கவின் ஆலோசனையின் பேரில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், மூதூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், மூதூர் நீதவான் நீதிமன்றில் அவரை ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## களுவாஞ்சிக்குடியில் தீப்பற்றி எரிந்த வீடு

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள மகிளூர் பிரதேசத்தில் பூட்டியிருந்த வீடொன்று தீப்பற்றி எரிந்து முற்றாக சேதமடைந்துள்ள சம்பவம் தொடர்பில், அவ் வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டின் உரிமையாளரும் அவரின் மகனும் சந்தேகத்தின் பேரில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்துக்கு அருகிலுள்ள இரு பிள்ளைகள் உட்பட 4 பேர் கொண்ட வீட்டின் உரிமையாளர், தகரத்தால்கட்டப்பட்டதனது வீட்டை பூட்டிவிட்டு, சம்பவதினமான கடந்த செவ்வாய்க்கிழமை இரவு உறவினர் வீட்டுக்கு குடும்பத்துடன் தங்குவதற்குச் சென்றுள்ளனர்.



இந்நிலையில், நேற்று அதிகாலை 1.30 மணியளவில் வீடு தீப்பற்றி எரிந்ததையடுத்து, அயலில் உள்ளவர்கள் தீயை கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவந்தனர்.

இருந்தபோதும் வீடு முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது .இதனையடுத்து, வீடு தீப்பற்றிய சம்பவம் தொடர்பில் அவ் வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டின் உரிமையாளரான 50 வயதுடைய நபரும் அவரின் 18 வயதுடைய மகனும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாணவர்களுக்கு அடிப்படைவாத விரிவுரை நடாத்திய இருவர் கைது

அம்பாறை, ஒலுவில் பகுதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நிறைவு செய்த மாணவர்களுக்கு தீவிரவாத சித்தாந்தங்கள் குறித்த சொற்பொழிவனை நடத்தியமைக்காக இரு சந்தேக நபர்கள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒலுவில் பகுதியில் வசிக்கும் 30 மற்றும் 39 வயதுடைய நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் தமது சொற்பொழிவுக்காக பல்வேறு சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் காணொளிக் காட்சிகள் மற்றும் விரிவுரைகளின் உள்ளடக்கத்தை பயன்படுத்தியதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

அது மாத்திரமன்றி மாணவர்களுக்கு உடற் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும், அதனை ஏற்க மறுக்கும் மாணவர்கள் சந்தேக நபர்களால் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் கைதான நபர்கள் கொழும்பில் உள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் முக்கிய குற்றவாளியான சஹ்ரான் ஹாஷிம் இந்த இருவருக்கும் பயிற்சி அளித்ததாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஒரு நாள் தொடரை வென்றது பாகிஸ்தான் அணி

தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 -1 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி கைப்பற்றியுள்ளது.

செஞ்சூரியன் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத் தாட அழைக்கப்பட்ட பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றது. பஃகர் சமான் 101 ஓட்டங்களையும் பாபர் அசாம் 94, இமாம் உல் ஹக் 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில், மஹராஜ் 3 விக்கெட்டுக்களையும் மார்க்ரம் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 321 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 49.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 292 ஓட்டங்களை மட்டுமே பெற்றது . இதனால் பாகிஸ்தான் அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மலன் 70 ஓட்டங்களையும் கைல் வெர்ரெய்ன் 62, அன்டில் பெலுக்வாயோ 54 ஓட்டங்களையும் பெற்றனர். பாகிஸ்தான் அணியின் மொஹமட் நவாஸ் மற்றும் ஷாயின் ஷா அப்ரிடி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை யும் ஹரிஸ் ரவூப் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக பாபர் அசாமும் தொடரின் நாயகனாக பஃகர் சமானும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கொரோனா தீவிரம்

# பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் தொடர் நடப்பது சந்தேகம்



கொரோனாவின் தாக்கம் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில், பிரான்ஸ் முழுவதும் முழு ஊரடங்கை அமுல்படுத்துவது பற்றி அந்தநாட்டு அரசு ஆலோசித்து வருகிறது. இதனால் இந்த ஆண்டும் பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் போட்டிகள் தாமதமாகலாம் என பாரிஸில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே பிரெஞ்ச் ஓபின் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகள் வரும் மே 23 ஆம் திகதி முதல் ஜூன் 6 வரை நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டால், ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் போட்டிகளை நடத்த முடியாது. எனவே போட்டிகளை தள்ளி வைப்பது குறித்து பிரெஞ்ச் ஓபின் டெனிஸ் நிர்வாகிகள் ஆலோசித்து வருகின்றனர். மேலும் இது தொடர்பாக பிரான்ஸ் அரசும் போட்டி நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தி உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இது குறித்து பிரெஞ்ச் டென்னிஸ் சங்கத்தின் தலைவர் கில்ஸ் மோர்ட்டன் கூறுகையில், “முழுமையான ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டால் நிச்சயம் போட்டிகளை தள்ளி வைக்க நேரிடும். தற்போதைய அட்டவணைப்படி மே 23 ஆம் திகதி போட்டிகளை தொடக்க வேண்டும். அதற்கு முன்னதாக தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடத்த வேண்டும். இதற்காக வரும் வீரர்கள், வீராங்கனைகளை முதலில் 14 நாள்கள் தனிமையில் தங்க வைக்க வேண்டும். அதன் பின்னர் வெளித் தொடர்புகளை முற்றிலும் தவிர்த்து, விடுதி அறைகளிலிருந்து அவர்களை நேராக மைதானத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். போட்டி முடிந்த பின்னர் மீண்டும் அதே போல, அறைக்கு அழைத்து வர வேண்டும்.

பார்வையாளர்கள் இல்லாமல் போட்டிகளை நடத்துவதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. அனுமதிக்கப்பட்ட குறைவான எண்ணிக்கையில் பார்வையாளர்களுடன்தான் போட்டிகளை நடத்துவோம் என அரசிடம் கூறியிருக்கிறோம். எனவே முழுமையான ஊரடங்கு அறிவிக்கப்பட்டால், போட்டி திகதிகளை தள்ளி வைப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. ஆனால் தற்போது வரை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட காலப்பகுதியில் போட்டிகளை நடத்த தேவையான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறோம். அந்த நடவடிக்கைகளை நிறுத்தவில்லை” என்று தெரிவித்தார்.

# ஐ.பி.எல்லுக்கு புதிய பாடல் எட்டு மொழிகளில் உருவாக்கம்!

கொரோனா சூழல் காரணமாக கடந்த வருட ஐ.பி.எல். போட்டித் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்றது. இந்த வருடம் தொடர் இந்தியாவிலேயே நடத்தப்படுகிறது. சென்னை, மும்பை, கொல்கத்தா, அகமதாபாத், தில்லி, பெங்களூர் ஆகிய ஆறு நகரங்களில் ஐ.பி.எல். போட்டிகள் நடைபெறவுள்ளன.

கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக ஆரம்பப் போட்டிகளுக்கு மைதானங்களுக்கு வர ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. நாளை சென்னையில் நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் மும்பையும் பெங்களூரும் மோதுகின்றன. அடுத்த நாள், மும்பையில் சென்னையும் டில்லியும் சந்திக்கின்றன.



இந்த நிலையில் ஐ.பி.எல். போட்டிக்காக ஹொட்ஸ்டார் நிறுவனம் 'India Ki Vibe Alag Hai' என்கிற புதிய பாடல் ஒன்றை எட்டு மொழிகளில் உருவாக்கியுள்ளது. ஐ.பி.எல். தொடரை ஒவ்வொரு அணி ரசிகர்களும் எப்படிக் கொண்டாடுகிறார்கள், ஐ.பி.எல். போட்டிகள் அதன் ரசிகர்களுக்கு எவ்வளவு முக்கியமானவை என்பதை விளக்கும் விதமாகப் பாடலின் காணொளி உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு நியூகிளியா இசையமைத்துள்ளார். ஐ.பி.எல். அணிகளை முன்னிறுத்தும் எட்டு நகரங்களிலும் இப்பாடல் படமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரோயல் சலஞ்சர்ஸ் சீருடையில் உசைன் போல்ட்!



14 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நாளை தொடங்குகிறது. சென்னையில் நடக்கும் முதல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியும் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதுகின்றன. இந்நிலையில் உலகின் தலைசிறந்த ஓட்டப்பந்தைய வீரரும் 8 முறை ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்றவருமான ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த உசைன் போல்ட், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் சீருடையை அணிந்திருக்கும் தனது புகைப்படத்தை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அவர் ஆர்.சி.பி. அணியின் கப்டன் விராட் கோலி மற்றும் ஏ.பி.டி. வில்லியர்ஸ் ஆகிய இருவரையும் டக் செய்து, 'சலஞ்சர்ஸ் உங்களுக்கு நான் ஒன்றை தெரியப்படுத்துகிறேன். நான் இன்னமும் வேகமான பூனையாகத்தான் சுற்றிக் கொண்டிருக்கிறேன்' என பதிவிட்டிருந்தார். உசைன் போல்டின் இந்தப் பதிவுக்கு விராட் கோலி, டிவில்லியர்ஸ் இருவரும் கமெண்ட் செய்துள்ளனர்.

இது குறித்து கோலி பதிவிடுகையில், எந்த சந்தேகமும் இல்லை, அதனால்தான் உங்களை இப்போது எங்கள் அணியில் சேர்த்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார். டிவில்லியர்ஸ் கூறுகையில், 'சில கூடுதல் ரன்கள் தேவைப்படும்போது யாரை அழைப்பது என்பது எங்களுக்குத் தெரியும்' எனப் பதிவிட்டுள்ளார்.

# ஒருநாள் தொடரை வென்றது ஆஸ்திரேலிய மகளிர் அணி



நியூஸிலாந்து மகளிர் அணிக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலும் ஆஸ்திரேலிய மகளிர் அணி 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை அந்த அணி தற்போது 2 – 0 என தன் வசப்படுத்தியுள்ளது.


நியூஸிலாந்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 271 ஓட்டங்களை எடுத்திருந்தது. ரேச்சல் ஹேய்னஸ் 8 பவுண்டரிகளுடன் 87 ரன்கள் பெற்றிருந்தார். எமி சட்டாவெய்ட் 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

அடுத்து ஆடிய நியூஸிலாந்து 45 ஓவர்களில் 200 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. எமிலியா கொ அதிகபட்சமாக 5 பவுண்டரிகளுடன் 47 ஓட்டங்களைப் பெற, ஆஸ்திரேலிய தரப்பில் ஜெஸ் ஜோனஸ்ஸன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ஆலோசனைப் பொறிமுறை ஒன்றை நிறுவ இலங்கை - ஆப்கான் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்





கொழும்பு, ஏப். 08

அரசியல் ஆலோசனைப் பொறிமுறையொன்றை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் வெளிவிவகார வெளிவிகார அமைச்சுகள் நேற்று புதன்கிழமை கையெழுத்திட்டுள் ளன.

இரு தெற்காசிய நாடுகளுக்கிடையிலான வழக்க மானஈடுபாடுமற்றும்கூட்டாண்மைக்கானபுரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குண வர்தன கைச்சாத்திட்டதுடன், கொழும்பிலுள்ள ஆப்கா னிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதரி ஆப்கான் அரசாங் கத்தின் சார்பில் கைச்சாத்திட்டார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், இரு வெளி நாட்டு அமைச்சுக்களினதும் ஆக்கபூர்வமான வசதி யளித்தல்களின் மூலம் இலங்கை - ஆப்கானிஸ்தான் இருதரப்புப் பங்காண்மை மேலும் வளர்ச்சியடையும் ஆதலால், இருதரப்பு உறவுகளின் முழுமையான வரம் புகளை வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்ய முடியும் என இரு நாடுகளும் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தின.

அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு, கலாசாரம், சுகாதாரம், சமூகம், மக்களுக்கிடையிலான தொடர்பு கள் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு உட்பட பொதுவான நலன்களின் ஏனைய பகுதிகளை இது உள்ளடக்கும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத் திடுவதன் மூலம், அரசியல் ஆலோசனைகள் அல்லது வெளிநாட்டு அலுவலக ஆலோசனைகளின் இருதரப்பு ஆவணங்களை தெற்காசியப் பிராந்தியத்தின் அனைத்து நாடுகளுடனும் நிறுவுவதை இலங்கை நிறைவு செய்கின்றது. கைச்சாத்திடப்பட்ட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடை யிலான 63 ஆண்டுகால முறையான இராஜதந்திர உறவுகளின் வரலாற்றில் ஒரு முக்கியமான இருதரப்பு ஆவணமாகும்.

இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவ தற்கும், எதிர்காலத்தில் அரசியல் ஆலோசனைகளின் அங்குரார்ப்பண அமர்வை பரஸ்பரம் ஏற்றுக்கொள ளக்கூடிய நேரத்தில் நடத்துவதற்கும் இரு தரப்பின ரும் ஒப்புக்கொண்டனர். பொருளாதார மற்றும் வர்த் தக விடயங்களிலான நெருக்கமான ஒத்துழைப்பு மற் றும், அண்டை நாடுகள் மற்றும் சார்க் உறுப்பினர்களு டனான தொடர்பு ஆகியன இலங்கையின் முன்னணிப் பொருளாதார இராஜதந்திர இலக்காக உள்ளது.

தேயிலை, இரத்தினம் மற்றும் ஆபரணங்கள், உலர் பழங்கள், விதைகள் மற்றும் தானியங்கள் உள்ளிட்ட இருதரப்பு வர்த்தகத்திற்கான உயர் சாத்தி யம் மிகுந்த பகுதிகளை இரு தரப்பினரும் அடிக்கோடிட் டுக் காட்டியதுடன், நேரடி விமான இணைப்பானது இரு நாடுகளுக்குமிடையிலான சுற்றுலா, கலாசார மற் றும் சமூக ஈடுபாடுகளில் நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்தும் என்பதை சுட்டிக் காட்டினர்.

பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச் சர் தாரக பாலசூரிய, வெளியுறவுச் செயலாளர் அட்மி ரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் கொழும் பில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதரகம் மற்றும் வெளி நாட்டு அமைச்சின் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ரஞ்சனின் விடயத்தில் மனிதத்துவம் வேண்டும்

## சஜித் கோரிக்கை



ரஞ்சன் ராமநாயக்கவின் நாடா ளுமன்ற உறுப்பினர் விவகாரம் தொடர்பாக சபாநாயகர் மனிதத் தன் மையுடன் செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ கேட்டுக்கொண்டார்.

நீதிமன்றத்தை அவமதித்த வழக் கில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு 4 வருடம் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாக உள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று அறிவித்தார்.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ் வாறு கருத்து தெரிவித்தார்,

'நாடாளுமன்ற சட்டத்தின் 66B சரத்துக்கு இணங்க, ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாது செய்யப்படு வதாகத் தெரிவித்துள்ளீர்கள்.

நீங்கள் இந்தத் தீர்மானத்தை, ரஞ்சன் ராமநாயக்க மூன்று மாதங்களுக்கும் மேல் நாடாளுமன்றுக்கு வருகை தராத காரணத் தினால்தான் எடுத்ததாகக் கூறியுள்ளீர்கள்.

நான் மார்ச் 9 ஆம் திகதியன்று சபையில் வைத்து, ரஞ்சன் ராம நாயக்க நாடாளுமன்றுக்கு வருகைத் தராதிருப்பதற்கான அனுமதி யைக் கோரியிருந்தேன். நாடாளுமன்ற செயலாளர் நாயகம் இதுதொடர்பாக எமக்கு அனுப்பியுள்ள எழுத்து மூலமான கடிதத்தில், இதற்கான அனுமதியை வழங்க முடியாது என்றும் நீதிமன்றத்தை அவமதித்தமையால் நாடாளுமன்றுக்கு அவரை அனுமதிக்க முடியாது என்றும் கூறப்பட்டிருந்தது.

அதாவது, அவர் நாடாளுமன்றுக்கு வருகை தராமல் இருந்து மூன்று மாதங்கள் முடிவடைய, இரண்டு வாரங்களுக்கு முன்னரே நாம் இதற்கான அனுமதியைக் கோரியிருந்தோம்.

இதற்கு நீங்கள், நீதிமன்றில் இந்த விவகாரம் உள்ளமையால் இதுவிடயம் தொடர்பாகத் தீர்மானிக்க முடியாது என்று கூறினீர்கள். இந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த திங்கட் கிழமையன்று அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

எனினும், இதற்கெதிராக உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய் யக்கூடிய சூழல் இருக்கும் நிலையில், தற்போது நீங்கள் அவரின் உறுப்புரிமையை இரத்தாவதாக அறிவித்துள்ளீர்கள்.

அவர் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்து, இதற்கொரு முடிவு வரும்வரை அவருக்கான வாய்பொன்றை வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். இதனை மனிதத் தன்மையுடன் நோக்க வேண்டும். - என்றார்.

# புதிய கொரோனா கொத்தணி நாட்டில் உருவாகும் வாய்ப்பு

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை



நாளாந்தம் 100 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் அடையாளம் காணப் படுகின்றமையால் நாட்டில் கொரோ னாத் தொற்றின் புதிய கொத்தணி உருவாகக்கூடும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று (புதன்கிழமை) கொழும்பில் நடைபெற்றஊடகவியலாளர்சந்திப்பில் பேசிய தொற்றுநோயியல் பிரிவின் பிர தானி வைத்தியர் சுதத் சமரவீர, மக்கள் அதிகளவில் கூடும் இடங்கள் இன் னும் ஆபத்தில் உள்ளன எனக் கூறி னார்.

ஆகவே முகக்கவசம் அணிவது மற் றும் சமூக விலகல் உள்ளிட்ட வழிகாட் டுதல்களைப் பொதுமக்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, அவசரகால பயன் பாட்டுக்காக சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியை அங்கீகரிக்க கணிசமான தரவுகளைப் பெற்றுள்ளதாக வைத்தி யர் சுதத் சமரவீர குறிப்பிட்டார்.

இருப்பினும் நிபுணர் குழு ஒப்புதல் வழங்க இன்னும் தரவுகள் அவசியம் என சுட்டிக்காட்டிய அவர், விரைவில் இலங் கையில் சினோபோர்ம் தடுப்பூசியைப் பயன்ப டுத்த அங்கீகாரம் வழங்கப்படும் எனவும் தெரி வித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org